செய்தி வெளியீடு எண்:980 நாள்:29.10.2021

## பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள், 2021–2022–ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்போது, ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 98 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் பாடப் பிரிவு பயிலும் மாணாக்கருக்காக, 51 கணினி ஆய்வகங்களுக்கு 6 மின்கலன்களுடன் கூடிய இன்வர்ட்டர்கள் (Inverters) ரூ.87.00 இலட்சம் செலவில் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டிருந்தார்கள்.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, ஆதி திராவிடர் நலத் துறையின் கீழ் இயங்கும், 98 மேல்நிலைப் பள்ளிகளில் இன்வர்ட்டர் வசதி இல்லாத 51 மேல்நிலைப் பள்ளி கணினி ஆய்வகங்களுக்கு, 6 மின்கலன்களுடன் கூடிய 5 KVA திறன் கொண்ட இன்வர்ட்டர் வாங்கி வழங்கிட ரூ.86,70,000/– நிதி ஒப்பளிப்பு செய்து 28.10.2021 நாளிட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9